தொம்பகுளம் ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.T.ரோஜா,

ந.க.எண் 1/2023-2024 நாள்: 26.02.2024

பொருள்	:	குடியிருப்பு மனைப்பரிவு அங்கீகாரம் - திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் - தொம்பகுளம் ஊராட்சி - கே.சண்முகசுந்தராபுரம் கிராமம் கீழராஜகுலராமன் வருவாய் கிராமம் சர்வே எண்கள்.502/2B ஏக்கர் 1.53ல் பரப்பளவு 4115.23 ச.மீட்டர் இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்
பார்வை	:	துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு விருதுநகர் அவர்களின் கடிதம் ந.க.எண்.Z67HVVY/2024/TCP நாள்.19.02.2024

உத்தரவு :-

திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் - தொம்பகுளம் ஊராட்சி - கே.சண்முகசுந்தராபுரம் கிராமம், கீழராஜகுலராமன் வருவாய் கிராமம் சர்வே எண்கள். 502/2B ஏக்கர் 1.53ல் பரப்பளவு 4115.23 ச.மீட்டர் இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் பார்வையில் கண்ட கடிதத்தின்படி நிபந்தனைகளுடன் வரப்பெற்றுள்ளது. ஏற்கெனவே திருவில்லிபுத்தூர் சார்பதிவக எண். 255/2024 நாள்:09.02.2024-ன்படி பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் பத்திர பதிவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்படும் இனங்களுக்கு கூராய்வு கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1000/ ம் நில பயன்மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3 விழுக்காடும் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரரின் இடத்திற்கான சார்பதிவாளர் கீழராஜகுலராமன் அவர்களின் வழிகாட்டு மதிப்பீட்டுச் சான்றின்படி சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ.1050/ என்ற அடிப்படையில் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நில பயன் மாற்றக் கட்டணமாக ரூ.22950/ ம் கூராய்வு கட்டணமாக ரூ.1530/ மற்றும் மனைஎண் 1-31-க்கு மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 31 மனைக்கு ரூ.31,000/- பல்வகை ரசீது எண்.30391 நாள்:26.02.2024 ன்படி மொத்தம் ரூ.55480/ மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே பார்வையில் கண்ட கடிதத்தில் அளிக்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி ஒப்புதலின்படியும் இணைந்து வரப்பெற்ற மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின் அடிப்படையிலும் , உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு விட்டதாலும் , நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி தொம்பகுளம் ஊராட்சி - கே.சண்முகசுந்தராபுரம் கிராமம், கீழராஜகுலராமன் வருவாய் கிராமம் சர்வே எண்கள். 502/2B-ல் கீழ்க்கண்டவாறு குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

சர்வே எண்கள் ,	மனைப்பிரிவு எண்கள்	வீட்டு மனைகளின் எண்ணிக்கை	மொத்தப் பரப்பளவு
502/2B	1-31	31	4115.23.ச.மீ

நிபந்தனைகள்:-

☐ பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மனுதாரர் பத்திரப்பதிவு செய்து கொடுத்த இடங்களை மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் அரசின் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொடுக்க வேண்டும்.

☐ மனுதாரர் உபயோகம் ஒதுக்கப்பட்ட இடங்களில் கட்டுமானம் ஏதும் மேற்கொள்ளக் கூடாது.

☐ தனி மனைகள் குறித்து நில உரிமம் மற்றும் அளவுகள் விபரம் ஆகியவற்றில் ஏதேனும் குறைபாடுகளோ முறைகேடுகளோ தெரியவந்தால் மேற்படி உத்தரவு எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் .

☐ இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் தவறும் பட்சத்தில் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

T.Rosy

தலைவர்

இணை இயக்குநர் நிலை ஊராட்சி

திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம்

தொம்பக்குளம்

இணைப்பு :-

மனைப்பிரிவு அங்கீகார வரைபடம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்:-

திரு.M.கணேசன்

த/பெ.முத்தையா,

1/129A-பூலாஊரணி புதுத் தெரு,

ஆணையூர் கிராமம்,

சிவகாசி வட்டம்,

விருதுநகர் மாவட்டம்

நகல்

☐ துணை இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், விருதுநகர்

☐ மாவட்ட பதிவாளர் (பத்திர பதிவு), விருதுநகர்

☐ மாவட்ட ஆட்சியர் (ஊராட்சிகள் பிரிவு), விருதுநகர்

☐ சார்பதிவாளர் அலுவலகம், கீழராஜகுலராமன்